# நமது தினகனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol: 01 | Issue: 297 | 4 Pages | 30.5.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 297 | 4 பக்கங்கள் | 30.5.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## ஜூன் 4க்கு பிறகு மோடி, பாஜகவுக்கு குட்பை ராகுல்காந்தி



டெல்லி, மே. 30

இந்தியாவில் பாராளுமன்ற தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறுகிறது. ஏற்கனவே 6 கட்ட தேர்தல் முடிவடைந்த நிலையில், ஜூன் 1 அன்று 7ஆம் கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இந்நிலையில், உத்தரப்பிரதேசத்தில் ராகுல்காந்தி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். அப்போது, வெப்ப அலையை தாங்க முடியாமல் அவர் தலையில் தண்ணீர் ஊற்றிக்கொண்ட வீடியோ வைரலானது.

அக்கூட்டத்தில் பேசிய அவர், "ஜூன் 4க்குப் பிறகு குட்பை பாஜக , குட்பை நரேந்திர மோடி. பாஜகவின் ஆட்சி ஜூன் 4ஆம் தேதியுடன் முடிவடையும். பாஜகவிற்கு இன்னும் ஏழு நாட்கள் மட்டுமே உள்ளது.

மோடி கூறியது போல, அவர் மற்றவர்களை போல உயிரியல் சார்ந்த பிறப்பல்ல. கடவுளால் உருபெற்றவர் தான் என்றால், அவர் உருபெற்றது உழைக்கும் மக்களுக்காகவோ, உழவர்களுக்காகவோ அல்ல. அம்பானி அதானிக்காக மட்டுமே.

தேர்தலுக்கு பின்பு ஊழல் தொடர்பாக மோடியிடம் அமலாக்கத்துறை விசாரித்தால் தனது செயல்களுக்கு பரமாத்மா தான் காரணம் என்று கூறி அவர் தப்பித்து விடுவார்" என்று தெரிவித்துள்ளார்.

## கேரள மாநிலம் கொச்சியில் மேகவெடிப்பால் 1.30 மணிநேரத்தில் 98.4 மி.மீ மழைப்பொழிவு




கேரளா, மே. 30

கேரளா மாநிலம் கொச்சி மாவட்டத்தில் மேகவெடிப்பால் 1.30 மணி நேரத்தில் 98.4 மி.மீ மழைப்பொழிவு பதிவாகியுள்ளது. பொதுவாக 1 மணி நேரத்தில் 100 மிமீ மழை பெய்வதுதான் மேக வெடிப்பு என்று சொல்லப்படுகிறது.

கொச்சியில் கொட்டி தீர்த்த கனமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

கேரளாவில் நாளை பத்தனம்திட்டா, ஆலப்புழா, கோட்டயம், எர்ணாகுளம் ஆகிய மாவட்டங்களுக்கு கன மழைக்கான ஆரஞ்சு எச்சரிக்கையும் திருவனந்தபுரம், கொல்லம், இடுக்கி, திருச்சூர் ஆகிய மாவட்டங்களுக்கு மஞ்சள் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

## குதிரை பேர குற்றச்சாட்டு.. அவதூறு வழக்கில் டெல்லி அமைச்சர் அதிஷிக்கு உயர்நீதிமன்றம் சம்மன்



டெல்லி, மே. 30

ஆம் ஆதிமி கட்சியின் முக்கிய தலைவரும் டெல்லியின் கல்வி அமைச்சருமான அதிசி, பாஜக குறித்து அவதூறாக பேசியாத தொடரப்பட்ட வழக்கில் வரும் ஜூன் 29 ஆம் தேதி நேரில் ஆஜராகும்படி டெல்லி உயர்நீதிமன்றம் சம்மன் அனுப்பியுள்ளது.

ஆம் ஆத்மி எம்எல்ஏக்கள் 7 பேரை பாஜக ரூ.25 கோடிக்கு விலைக்கு வாங்க முயன்றதாக அரவிந்த் கெஜ்ரிவால் குற்றம் சாட்டியிருந்தார். கடந்த ஏப்ரல் மாதம் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் டெல்லி அமைச்சர் அதிஷி பேசுகையில், தனக்கு நெருக்கமானவர்கள் மூலம் பாஜக தன்னை விலைக்கு வாங்க முயன்றதாகவும், தனது அரசியல் வாழ்க்கையை காப்பாற்றிக் கொள்ள பாஜகவில் சேருமாறு வறுப்புத்தப்பட்டதாகவும் கூறினார். இதற்கு மறுத்தால் ஒரு மாதத்துக்குள் அமலாக்கத்துறையை அனுப்பி கைது செய்துவிடுவோம் என்று பாஜக மிரட்டியதாக தெரிவித்திருந்தார்.

இதைதொடர்ந்து டெல்லி பாஜக ஊடகப்பிரிவுத் தலைவர் சங்கர் கபூர் , கடந்த ஏப்ரல் 30 ஆம் தேதி அதிஷி மற்றும் அரவிந்த் கெஜ்ரிவால் மீது அவதூறு வழக்குத் தொடர்ந்தார். அதிஷி ஊடகத்தின் முன்னிலையிலும் மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில்தான் அதிஷி ஜூன் 29 ஆம் தேதி நேரில் ஆஜராகும்படி சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. முன்னதாக ஜூன்1 ஆம் தேதி கெஜ்ரிவாலின் ஜாமின் முடிய உள்ள நிலையில் அவரின் ஜாமீன் நீட்டிப்பு கோரிக்கை மனுவை உடனே விசாரிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் இன்று தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# கலைஞரின் கனவு இல்லம்: வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு




சென்னை, மே. 30

கடந்த பிப்ரவரி 19ம் தேதி தமிழ்நாடு சட்டப்பேரவையில், நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கலைஞரின் கனவு இல்லம் திட்டம் தொடர்பான அறிவிப்பை வெளியிட்டார். இந்த அறிவிப்பை தொடர்ந்து, கடந்த மார்ச் மாதம், ஊரக வளர்ச்சித்துறை இதற்கான அரசாணையை வெளியிட்டது. அதில், பயனாளிகளுக்கான தகுதிகள் உள்ளிட்ட விவரங்கள் வெளியாகின.

இந்நிலையில், இத்திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான வழிகாட்டுதல்களை ஊரக வளர்ச்சித்துறை இயககுனர் பி.பொன்னையா வெளியிட்டு, பல்வேறு அறிவுறுத்தல்களை மாவட்ட கலெக்டர்களுக்கு வழங்கியுள்ளார். அதன்படி தமிழ்நாட்டில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், இந்த 202425ம் நிதியாண்டில் ஒரு வீட்டுக்கு ரூ.3.10 லட்சம் என்ற அளவில், ஒரு லட்சம் வீடுகள் கட்ட ரூ.3100 கோடி நிதி ஒதுக்கி, வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

.★ வீடுகள் அனைத்தும் 360 சதுரடி அளவில் சமையலறையுடன் இருக்க வேண்டும்.

★ 300 சதுரடி ஆர்சிசி கூரையுடனும், மீதமுள்ள 60 சதுரடிக்கு தீப்பிடிக்காத பொருளில் அமைக்கப்பட்ட கூரையாக, பயனாளிகளின் விருப்பத்துக்கேற்ப அமைக்கப்பட வேண்டும்.

★ ஓலை அல்லது அஸ்பெஸ்டாஸ் கூரைகள் அமைக்கப்படக்கூடாது.

★ ஒரு வீட்டுக்கான தொகை அனைத்தையும் சேர்த்து ரூ.3.50 லட்சத்துக்குள் இருக்க வேண்டும்.

★ வீட்டின் சுவர்கள் செங்கல், இன்டர்லாக் பிரிக், ஏஏசி பிளாக் உள்ளிட்டவற்றால் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

★ மண்ணால் கட்டப்படும் சுவர்கள் கூடாது. செலவை குறைக்கும் தொழில்நுட்பங்கள், விரைவான கட்டுமானம் போன்றவை அனுமதிக்கபடுகிறது

.★ குடிசையில் வாழ்பவர்கள், கேவிவிடி மறுசர்வே பட்டியலி'ல் உள்ளவர்கள் அனைவருக்கும் வீடு சர்வே பட்டியலில் உள்ள குடிசை வீட்டு பயனாளிகள் இதில் தேர்வு செய்யப்பட வேண்டும்.

★ கேவிவிடி சர்வே மற்றும் புதிய குடிசைகள் சர்வே விவரங்கள், வரும் 31ம் தேதிக்குள் ஊரக வளர்ச்சித்துறை இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

★ இத்திட்டத்துக்கான தகுதியான பயனாளிகள், கிராம ஊராட்சி தலைவர், கிராம ஊராட்சி உதவி பொறியாளர் அல்லது வட்டார பொறியாளர், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வார்டு உறுப்பினர், ஊராட்சி மேற்பார்வையாளர் ஆகியோர் அடங்கிய குழு தகுதியான பயனாளியை தேர்வு செய்ய வேண்டும்.

★ இந்த குழு அனைத்து குடிசைகளையும் ஆய்வு செய்து,

தகுதிகள் அடிப்படையில் பயனாளிகளை தேர்வு செய்ய வேண்டும். தகுதியானவர்கள் பட்டியலில் விடுபட்டிருந்தால் அவர்களே சேர்க்கவேண்டும். விடுபட்டவர்கள் பட்டியலுக்கு மாவட்ட கலெக்டரிடம் அனுமதி பெற வேண்டும். அதன்பின், பயனாளிகள் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

★ பிரதமரின் வீடுகட்டும் திட்டத்தில் (ஊரகம்) 25 முதல் 50 வீடுகள் நிலுவையில் இருந்தால் அந்த ஊராட்சி இந்த ஆண்டுக்கான கலைஞரின் கனவு இல்ல திட்ட ஒதுக்கீட்டில் சேர்க்கப்படாது.

★ எந்த ஒரு ஊராட்சியில் 50க்கு மேற்பட்ட வீடுகள் ஊரக வீடுகள் திட்டத்தின் கீழ் பழுதுபார்ப்புக்கு எடுக்கப்பட்டிருந்தால் அந்த ஊராட்சிகளும் இதில் சேர்க்கப்பட வேண்டியதில்லை.

★ வீடுகள் ஒதுக்கீடு தொடர்பான விவரங்களை வட்டம் மற்றும் கிராம அடிப்படையில் தயாரித்து ஊரக வளர்ச்சி இயக்குனரகத்துக்கு அனுப்ப வேண்டும்.

இவ்வாறு அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

## தமிழக பாடத்திட்டத்தில் சுதந்திர போராட்ட வீரர்கள் வரலாறு குறைவாகவே உள்ளது: கவர்னர் ஆர்.என்.ரவி



நீலகிரி, மே.30

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் உள்ள ராஜ்பவனில் அரசு மற்றும் தனியார் பல்கலைக்கழக துணை வேந்தர்களின் மாநாடு இரண்டு நாட்களாக நடைபெற்றது. இன்றைய மாநாட்டின் நிறைவு விழாவில் கவர்னர் ஆர்.என். ரவி பேசியதாவது;

தமிழகத்தில் பி.ஏ, எம்.ஏ. வரலாறு, அரசியல் அறிவியல் பாடத்திட்டத்தில் இந்திய சுதந்திரப் போராட்டம் முற்றிலும் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது. தமிழக கல்லூரிகளின் பாடத்திட்டம் திராவிட இயக்க கதைகளால் நிரம்பியுள்ளது.

தேசிய அளவிலான சுதந்திர போராட்ட வீரர்கள் தமிழ்நாடு பாட புத்தகத்தில் இடம்பெறவில்லை. வேலு நாச்சியார், கட்டபொம்மன் ஆகியோர் பெயர்கள் சமூகஅறிவியல், வரலாறு பாட புத்தகத்தில் உள்ளன. நேதாஜியின்

இந்திய தேசிய ராணுவத்தில் பல்லாயிரக்கணக்கில் தமிழர்கள் இணைந்தனர். சுதந்திர போராட்ட இருட்டடிப்பு தமிழர்களை தேசிய நீரோட்டத்தில் இருந்து பிரித்துவிடும்." இவ்வாறு அவர் பேசினார்.

## சென்னை எழும்பூர் நாகர்கோவில் அதிவிரைவு சிறப்பு ரெயில் நீட்டிப்பு

சென்னை, மே. 30

கோடை விடுமுறையை முன்னிட்டு பயணிகளின் வசதிக்காவும், கூட்ட நெரிசலை தவிர்க்கவும் ஏற்கனவே இயக்கப்பட்டு வந்த சிறப்பு ரெயில்கள் சேவை நீட்டிக்கப்படுவதாக தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

நெல்லையில் இருந்து இரவு 6.45 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 8.30 மணிக்கு சென்னை எழும்பூர் வரும் வாராந்திர சிறப்பு ரெயில் (வண்டி எண்.06070) வரும் ஜூன் 6, 13, 20, 27 (வியாழக்கிழமை மட்டும்) ஆகிய தேதிகள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மறு மார்க்கமாக, சென்னை எழும்பூரில் இருந்து மதியம் 3 மணிக்கு புறப்பட்டு மறுநாள்காலை 7.10 மணிக்கு நெல்லை செல்லும் வாராந்திர சிறப்பு ரெயில் (06069) வரும் ஜூன் 7, 14, 21, 28 (வெள்ளிக்கிழமை மட்டும்) ஆகிய தேதிகள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாகர்கோவிலில் இருந்து இரவு 11.15 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 11.15 மணிக்கு சென்னை எழும்பூர் வரும் அதிவிரைவு சிறப்பு ரெயில் (06019) வரும் ஜூன் 2, 16, 30 ஆகிய தேதிகள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மறு மார்க்கமாக, சென்னை எழும்பூரில் இருந்து மதியம் 3 மணிக்கு புறப்பட்டு மறுநாள்காலை 3.15 மணிக்கு நாகர்கோவில் செல்லும் அதிவிரைவு சிறப்பு ரெயில் (06020) வரும் ஜூன் 3, 17 மற்றும் ஜூலை 1 ஆகிய தேதிகள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

சென்னை எழும்பூர் நாகர்கோவில்

இதேபோல, நாகர்கோவிலில் இருந்து இரவு 11.15 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 11.15 மணிக்கு சென்னை எழும்பூர் வரும் அதிவிரைவு சிறப்பு ரெயில் (06021) வரும் ஜூன் 9, 23 ஆகிய தேதிகள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மறு மார்க்கமாக, சென்னை எழும்பூரில் இருந்து மதியம் 3.15 மணிக்கு புறப்பட்டு மறுநாள்காலை 3.15 மணிக்கு நாகர்கோவில் செல்லும் அதிவிரைவு சிறப்பு ரெயில் (06022) வரும் ஜூன் 10, 24 ஆகிய தேதிகள் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

சென்னை எழும்பூர் நாகர்கோவில் இடையே இயக்கப்பட இருக்கும் இந்த ரெயில்கள் ஏற்கனவே சென்னை சென்டிரலில் இருந்து நாகர்கோவிலுக்கு இயக்கப்பட்டது. தற்போது, மேற்கண்ட தேதிகள் முதல் இந்த ரெயில் சென்னை எழும்பூரில் இருந்து திருத்தப்பட்ட அட்டவணை மற்றும் நிறுத்தங்களுடன் நாகர்கோவிலுக்கு இயக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## இரவில் கடற்கரைக்கு செல்லலாமா..? சென்னை ஐகோர்ட் போட்ட உத்தரவு

சென்னை, மே. 30

சென்னை திருமங்கலத்தைச் சேர்ந்த ஜலீல் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் மனு ஒன்றை தாக்கல் செய்தார். அந்த மனுவில், வெப்பத்தின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க, கடற்கரை, பூங்காக்களை நாடும் மக்களை, இரவு 9:30 மணிக்கு மேல் காவல் துறையினர் துரத்தி விடுவதாக தெரிவித்துள்ளார்

இது குறித்து டி.ஜி.பி.க்கும், மாநகர காவல் ஆணையருக்கும் மனு அளித்தும் எந்த நடவடிக்கையும்



எடுக்கப்படவில்லை என கூறியுள்ளார். வெயிலின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க கடற்கரை செல்லும் மக்களை துரத்தக் கூடாது என காவல் துறையினருக்கு உத்தரவிடவேண்டும் என மனுவில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் சுவாமிநாதன், பாலாஜி அமர்வு, தமிழக டி.ஜி.பி. மற்றும் சென்னை மாநகர காவல் ஆணையர் பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை தள்ளிவைத்தனர்.

## உல்லாசத்துக்கு வரவில்லை என்றால்... வீடியோவை காட்டி பெண்ணை மிரட்டிய காவலாளி

கோவை, மே. 30

கோவை வேலாண்டிபாளையம் காந்தி காலனி மேற்கு வீதியை சேர்ந்தவர் ரங்கசாமி (வயது49). இவர் அங்குள்ள தனியார் மருத்துவமனையில் காவலாளியாக வேலை பார்த்து வந்தார். அப்போது அவருக்கு அங்கு வேலை பார்த்த 47 வயது பெண்ணுடன் காவலாளிக்கு பழக்கம் ஏற்பட்டது.

ஒரு கட்டத்தில் ரங்கசாமி, அந்த பெண்ணுடன் தனிமையில் நெருக்கமாக இருந்து உள்ளார். அதை அவர் ரகசியமாக தனது செல்போனில் வீடியோ எடுத்து உள்ளார். மேலும் அந்த ஆபாச வீடியோவை காட்டி தனது ஆசைக்கு இணங்காவிட்டால் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டு விடுவேன் என்று கூறி மிரட்டி உள்ளார். இது குறித்த புகாரின் பேரில் அனைத்து மகளிர் போலீசார் வழக்குப்பதிவு செய்து ரங்கசாமியை கைது செய்தனர்.

பின்னர் அவரை கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

சிறையில் இருந்து வெளியே வந்த ரங்கசாமி மீண்டும் அந்த பெண்ணை தொடர்பு கொண்டு உல்லாசத்திற்கு அழைத்து கொலை மிரட்டல் விடுத்து உள்ளார். இதையடுத்து அந்த பெண் மீண்டும் போலீசில் புகார் அளித்தார். புகாரின்பேரில் சாய்பாபா காலனி போலீசார் வழக்குப்பதிவு செய்து ரங்கசாமியை மீண்டும் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## தெருவோர குழாயில் குளித்த 10 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை

விழுப்புரம், மே.30

விழுப்புரம் மாவட்டம் மயிலம் அருகே உள்ள திருவக்கரை முத்துமாரியம்மன் கோவில் தவுட்டுக்குளம் பகுதியில் சாலையோர குடிநீர் குழாயில் அதே பகுதியைச் சேர்ந்த 10 வயது சிறுமி நேற்று காலை குளித்துக் கொண்டு இருந்தாள்.

அப்போது திருவக்கரையில் இருந்து லாரியில் கிரசர் மண் ஏற்றி வந்த, புதுவை சுத்துக்கேணி பகுதியைச் சேர்ந்த லாரி டிரைவர் முருகன் (வயது 33) அங்கு இறங்கி தண்ணீர் பிடிக்க சென்றார். அப்போது அங்கு குளித்துக் கொண்டிருந்த சிறுமியிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளார்.

இதைப் பார்த்த சிறுமியின் உறவுக்கார பெண் அங்கு ஓடி வந்தார். திடீரென லாரி டிரைவர் சிறுமியை தூக்கிக் கொண்டு லாரியின் சீட்டில் அமர வைத்து கடத்திச் செல்ல முயன்றார். அப்போது சிறுமியின் உறவுக்கார பெண், டிரைவர் முருகனின் சட்டையைப்பிடித்துஇழுத்து கூச்சலிட்டுள்ளார். அப்போது அவர் அந்த பெண்ணிடமும் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. பின்னர் தகாத வார்த்தையால் பேசி சிறுமியை கீழே இறக்கி விட்டு விட்டு, லாரியை வேகமாக எடுத்துச்சென்று விட்டார்.

சிறுமியிடமும், உறவுக்காரப் பெண்ணிடமும் நடந்தவற்றை விசாரித்த அப்பகுதி இளைஞர்கள், வானூர் போலீசில் புகார் அளித்தனர். ஆனால் அங்குள்ள போலீசார் இது போக்சோ பிரிவு என்பதால் கோட்டக்குப்பம் அனைத்து மகளிர் காவல் நிலையம் செல்லும் படி கூறிவிட்டனர்.

உடனடியாக களத்தில் இறங்கிய இளைஞர்கள், போலீசார் செய்யக்கூடிய புலனாய்வு பணியை தாங்களே தொடர்ந்தனர். அந்தப் பகுதியில் பதிவாகி இருந்தசி.சி.டி.வி. கேமரா பதிவு காட்சி மூலம் லாரியின் பதிவு எண் மற்றும் அடையாளங்களை வைத்து திருவக்கரையில் உள்ள பல்வேறு இடங்களில் தேடினர். நேற்று மாலை சுமார் 4 மணியளவில் அதே லாரி நெமிலி வெற்றிவேல் கிரஷர் நிறுவன பகுதியில் லோடு ஏற்றுவதற்காக நின்று கொண்டிருந்தது.

சிறுமியும், உறவுக்கார பெண்ணும் கொடுத்த அடையாளத்தின் படி டிரைவர் முருகனை பிடித்து இளைஞர்கள் விசாரித்தபோது, அவர் முன்னுக்குப் பின் முரணான தகவல் அளித்தார். மேலும் இளைஞர்கள் சரவணன் மற்றும் ராமச்சந்திரன் ஆகிய இருவரையும் தாக்கியதாக கூறப்படுகிறது. ஆத்திரமடைந்த இளைஞர்கள் ஒன்று சேர்ந்து, டிரைவருக்கு 'தர்ம அடி' கொடுத்து மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்து அவரை கோட்டக்குப்பம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் வள்ளி நடத்திய விசாரணையில் 10 வயது சிறுமியிடம்பாலியல்சீண்டலில் ஈடுபட்டது உறுதியானது. அதைத்தொடர்ந்து லாரி டிரைவர்முருகனைபோலீசார் கைது செய்து தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## பொது இடத்தில் இப்படியா...? வரம்பு மீறும் காதல் ஜோடிகள்... முகம் சுளிக்கும் கோவை மக்கள்

கோவை, மே. 30

இந்த உலகத்தில் நம்மில் உண்டாகும் ஒரு விஷயம்தான் காதல். அந்த உணர்வுக்கு மயங்காதவர் எவரும் இல்லை. அதை விரும்பாமல் யாருமே இருக்க மாட்டார்கள். அன்பு, பாசம், அக்கறை ஆகியவற்றுடன் பிணைக்கப்பட்டு இருப்பது தான் காதல். நீங்கள் தேர்வு செய்யும் துணை, அது உண்மையாக இருக்க வேண்டும்.. அப்போதுதான் உங்கள் வாழ்வில் உண்மை சங்கமிக்கும், உடலுக்கும், மனதுக்கும் மகிழ்ச்சியை கொடுக்கும்.

அதை விட்டுவிட்டு, காதலியை இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர வைத்து விட்டு துப்பட்டாவை தலையில் சுற்றி மறைத்தபடி அழைத்துச்செல்வது, பொதுமக்கள் கூடும் பூங்காக்களுக்கு சென்று மறைவான இடத்தில் அமர்ந்து கொண்டு பொதுமக்கள் முகம் சுளிக்க வைக்கும் வரம்பு மீறிய செயலில் ஈடுபடுவது உண்மையான காதல் அல்ல.

அப்படிதான் கோவையில் உள்ள பூங்காக்களில் நடந்து வருகிறது. குறிப்பாக கோவை வ.உ.சி. உயிரியல் பூங்காவை ஒட்டி உள்ள தாவரவியல் பூங்கா, ஸ்மார்ட்சிட்டிதிட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட குளக்கரை பூங்காக்களில் இதுபோன்று தான் பொது மக்களின் முகம் சுளிக்க வைக்கும் செயலில் காதல் ஜோடிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் கூறியதாவது:

கோவை வ.உ.சி. தாவரவியல் பூங்காவுக்கு விடுமுறை நாட்களில் வந்து செல்பவர்கள் அதிகம். அதிலும் குடும்பத்துடன், குழந்தைகளை அழைத்து பொழுதுபோக்குக்காக பலர் வருகின்றனர். ஆனால் அங்கு காதல் ஜோடிகள்செய்யும்செயல்கள் வரம்பு மீறும் வகையில் இருக்கிறது. எனவே அங்கு குழந்தைகளை அழைத்துச்செல்ல பெற்றோர் தயங்கும் நிலை உள்ளது. மரம், புதருக்கு இடையே மறைந்து அமர்ந்து கொண்டு அவர்கள் செய்யும் செயல்கள் ஏற்கக்கூடியது அல்ல. பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் இது போன்ற செயலில் ஈடுபடுவதை காதல் ஜோடியினர் தவிர்க்க வேண்டும். அவர்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றால் பல இடங்கள் உள்ளன. அதற்காக இப்படி பொதுமக்கள் அதிகமாக கூடும் இடத்தில் இப்படி செயல்படுவது தவறானது ஆகும். இதை பெற்றோர் கண்காணிக்க வேண்டும்.

கல்லூரி முடிந்ததும் சரியான நேரத்திற்கு வீடு திரும்புகிறார்களா, காலையில் கல்லூரிக்கு செல்கிறார்களா என கண்காணிப்பது அவசியம். இதுதவிர வாலாங்குளக்கரைபூங்கா, உக்கடம் குளக்கரை பூங்காக்களிலும் காதல் ஜோடிகள் எல்லை மீறி செயல்படுவது அதிகமாக நடந்து வருகின்றன. எனவே இந்த பகுதியில் கண்காணிப்பை தீவிரப்படுத்தி, பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கும் காதல் ஜோடிகள் மீது கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## மோடி மீண்டும் பிரதமராக வேண்டி மடிப்பிச்சை ஏந்திய பா.ஜனதா பெண் நிர்வாகி



பழனி, மே. 30

நாடாளுமன்ற தேர்தல் நிறைவுப்பெற உள்ள நிலையில் இறுதிக்கட்ட பிரசாரத்தில் அரசியல் கட்சியினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். வருகிற 1ந்தேதி இறுதி கட்ட வாக்குப்பதிவு நடைபெறுகிறது. 4ந்தேதி வாக்குகள் எண்ணப்பட்டு தேர்தல் முடிவுகள் அன்றே வெளியிடப்பட உள்ளது. தேர்தலில் வெற்றி பெறுவது யார்? என்று அரசியல் கட்சியினர், பொதுமக்களிடையேதற்போதே மிகுந்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பழனி திருஆவினன்குடி கோவிலுக்கு பா.ஜனதா சஷ்டி சேனா இந்து மக்கள் இயக்க நிர்வாகி சரஸ்வதி நேற்று வந்தார். பின்னர் கோவில் வாசலில் அண்ணாமலை படத்துடன் அமர்ந்து பக்தர்களிடம் மடிப்பிச்சை ஏந்தினார். அதில் கிடைத்த காணிக்கையை பழனி கோவில் உண்டியலில் அவர் செலுத்தி வழிபட்டார்.

அப்போது அவா் கூறுகையில், நாடு முழுவதும் மோடி அலை வீசுகிறது.

எனவே மீண்டும் 3வது முறையாக மோடி பிரதமராக வேண்டும். கோவை தொகுதியில் அண்ணாமலை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வேண்டும் என பழனி முருகனிடம் வேண்டுதல் வைத்து மடிப்பிச்சை எடுத்து நேர்த்திக்கடனை செலுத்தினேன் என்று கூறினார்.

## குறை பிரசவத்தில் பிறந்த குழந்தை இறந்ததால் தந்தை தற்கொலை



திருப்பத்தூர், மே. 30

திருப்பத்தூர் மாவட்டம் நாட்டறம்பள்ளியை அடுத்த மகாத்மா காந்தி தெருவை சேர்ந்தவர் பழனி (வயது 32). ஓசூர் பகுதியில் உள்ள தனியார் கம்பெனியில் வேலை செய்து வந்தார். இவருக்கும் ஏழரைபட்டி பகுதியை சேர்ந்த காயத்ரி என்பவருக்கும் ஒரு வருடத்திற்கு முன்பு திருமணம் நடந்தது.

இந்த நிலையில் காயத்ரி ஏழு மாத கர்ப்பிணியாக இருந்தார். அவருக்கு கடந்த 10 நாட்களுக்கு முன்பு வயிற்று வலி ஏற்பட்டுள்ளது. உடனடியாக அவரை திருப்பத்தூர் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அங்கு காயத்ரிக்கு 7 மாதத்திலேயே குறை பிரசவத்தில் பெண் குழந்தை பிறந்தது. பின்னர் சில மணி நேரத்தில் அந்த குழந்தை இறந்தது.

இதன்காரணமாகபழனி சரிவர சாப்பிடாமல், தூங்காமல் மன உளைச்சலில் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. இந்த நிலையில் மனமுடைந்த பழனி நேற்று முன்தினம் இரவு வீட்டில் உள்ள ஒரு அறையில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்து தகவல் அறிந்த நாட்டறம்பள்ளி போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பழனியின் உடலை மீட்டு திருப்பத்தூர் அரசு ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

குறை பிரசவத்தில் பிறந்த குழந்தை இறந்த தன் காரணமாக குழந்தையின் தந்தை தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## திருப்பூர்: வீட்டில் பதுக்கி வைத்திருந்த 18½ கிலோ கஞ்சா பீகாரை சேர்ந்த 5 பேர் கைது



திருப்பூர், மே.30

திருப்பூர் மாநகர பகுதியில் கஞ்சா விற்பனை அதிகரித்துள்ளதை தொடர்ந்து மாநகர போலீஸ் கமிஷனர் பிரவீன்குமார் அபினபு உத்தரவின் பேரில் தனிப்படை அமைத்து போலீசார் தீவிர தேடுதல் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். குறிப்பாக வெளிமாநிலங்களில் இருந்து தொழிலாளர்கள் என்ற போர்வையில் கஞ்சாவை கடத்தி வந்து திருப்பூரில் பதுக்கி வைத்து விற்பனை செய்து வருகிறார்கள்.

இந்தநிலையில் திருப்பூர் பொம்மநாயக்கன்பாளையம் பவானிநகர் பகுதியில் போலீஸ் உதவி கமிஷனர் அனில்குமார் மேற்பார்வையில் வடக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் உதயகுமார் தலைமையிலான போலீசார் நேற்று தீவிர சோதனை மேற்கொண்டனர். அப்போது குடியிருப்பு பகுதியில் ஒரு வீட்டில் வடமாநிலத்தவர்கள் தங்கியிருந்து கஞ்சா விற்பனை செய்தது தெரியவந்தது.

அந்த வீட்டில் இருந்து 5 பேரை பிடித்து விசாரித்தனர். விசாரணையில் அவர்கள் பீகார் மாநிலத்தை சேர்ந்த அபினேஷ்குமார் (வயது 23), ரோஷன் குமார் (20), விர்ஜிகுமார் (25), சன்னி (19) மற்றும் 17 வயது சிறுவன் என்பது தெரியவந்தது. அவர்களிடம் இருந்து மொத்தம் 18½ கிலோ கஞ்சா மற்றும் 4 செல்போன்களை பறிமுதல் செய்தனர்.

பீகாரில் இருந்து கஞ்சாவை வாங்கி வந்து வீட்டில் பதுக்கி வைத்து திருப்பூரில்விற்பனைசெய்ததாக தெரிவித்தனர். இதையடுத்து 5 பேரையும் போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நெல்லை எக்ஸ்பிரசில் ரூ.4 கோடி பறிமுதல்: பா.ஜ.க. மூத்த தலைவர் நயினார் நாகேந்திரனுக்கு சம்மன்





சென்னை, மே. 30

தமிழ்நாட்டில் 39 நாடாளுமன்ற தொகுதிகளுக்கும் கடந்த மாதம் 19ம் தேதி ஒரேகட்டமாக தேர்தல் நடைபெற்றது. தேர்தலின்போது பறக்கும்படையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

அந்த வகையில் கடந்த மாதம் 6ம் தேதி சென்னையில் இருந்து நெல்லைக்கு ரெயிலில் பணம் கொண்டு செல்லப்படுவதாக தேர்தல் பறக்கும்படையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, சென்னை எழும்பூரில் இருந்து புறப்பட்ட நெல்லை எக்ஸ்பிரஸ் ரெயில் தாம்பரம் சென்ற போது அதில் தேர்தல் பறக்கும்படையினர் அதிரடி சோதனை நடத்தினர். அந்த சோதனையில் உரிய ஆவணங்கள் இல்லாமல் எடுத்து செல்லப்பட்ட 4 கோடி ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில் அவர்கள், தமிழ்நாடு பா.ஜ.க. துணைத்தலைவரும், நெல்லை தொகுதி பா.ஜ.க. வேட்பாளருமான நயினார் நாகேந்திரனுக்கு சொந்தமான சென்னை புரசைவாக்கத்தில் உள்ள ஓட்டலில் பணியாற்றிய ஊழியர்கள் என்பது தெரியவந்தது. இந்த சம்பவம் தொடர்பான வழக்கு சிபிசிஐடி வசம் ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பாக நயினார் நாகேந்திரன் உள்பட பலர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. வழக்கு தொடர்பாக நேரில் ஆஜராகும்படி நயினார் நாகேந்திரனுக்கு சிபிசிஐடி ஏற்கனவே சம்மன் அனுப்பியுள்ளது. ஆனால் அவர் விசாரணைக்கு ஆஜராகவில்லை. அதேபோல், இந்த வழக்கில் பா.ஜ.க. மாநில அமைப்பு செயலாளர் கேசவ விநாயகம், பா.ஜ.க. மாநில பொருளாளர் எஸ்.ஆர்.சேகருக்கும் ஏற்கனவே சம்மன் அனுப்பி இருந்தது.

இந்நிலையில், 4 கோடி ரூபாய் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கில் நாளை மறுதினம் நேரில் விசாரணைக்கு ஆஜராகும்படி நயினார் நாகேந்திரனுக்கு சிபிசிஐடி சம்மன் அனுப்பியுள்ளது. சென்னை எழும்பூரில் உள்ள சிபிசிஐடி அலுவலகத்தில் நேரில் ஆஜராக நயினார் நாகேந்திரனுக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது.

அதேபோல், இந்த வழக்கில் தமிழ்நாடு பா.ஜ.க. அமைப்பு செயலாளர் கேசவவிநாயகம், பா.ஜ.க. தொழில் பிரிவு துணைத்தலைவர் கோவர்த்தன், நயினார்நாகேந்திரனின் உதவியாளர் மணிகண்டன் ஆகியோரும் நாளை மறுதினம் விசாரணைக்கு நேரில் ஆஜராக சி.பி.சி.ஐ.டி சம்மன் அனுப்பியுள்ளது.

## கேரள பெண்ணை திருமணம் செய்த மெக்கானிக்... முதலிரவில் காத்திருந்த அதிர்ச்சி; அடுத்து நடந்த பரபரப்பு



திருப்பூர், மே. 30

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் பாப்பனூத்து பகுதியை சேர்ந்தவர் ராதாகிருஷ்ணன் (வயது 29). இவர் காற்றாலை மெக்கானிக்காக வேலை பார்த்து வருகிறார். இவருக்கு திருமணமாகி மனைவி மற்றும் ஒரு குழந்தை உள்ளது. அவருக்கு குடிப்பழக்கம் இருந்ததால் அவரது மனைவி ராதாகிருஷ்ணனை விட்டு பிரிந்து சென்று விட்டார். இதையடுத்து அவருக்கு மறுமணம் செய்து வைக்க அவரது குடும்பத்தினர் பெண் பார்த்து வந்தனர்.

இதனை தெரிந்து கொண்ட கேரள மாநிலம் கொழிஞ்சம்பாறை பகுதியை சேர்ந்த திருமண புரோக்கர் ஒருவர் ராதாகிருஷ்ணனை அணுகினார். அப்போது அவர் கேரளாவை சேர்ந்த ஒரு பெண்ணின் புகைப்படத்தை ராதாகிருஷ்ணனிடம் காண்பித்தார்.

அந்த படத்தில் இருந்த பெண்ணை ராதாகிருஷ்ணனுக்கு பிடித்து விட்டது. இதையடுத்து தடபுடலாக அந்த பெண்ணை ராதாகிருஷ்ணனுக்கு பேசி திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அப்போது பெண் வீட்டில் வசதி இல்லாததால் உதவி செய்யும்படி புரோக்கர் கேட்டுக் கொண்டுள்ளார். இதை ஏற்று ராதாகிருஷ்ணன் வீட்டார் அந்தப் பெண்ணுக்கு 1½ பவுனில் நகை வாங்கி போட்டுள்ளனர். மேலும் புரோக்கருக்கு ரூ.80 ஆயிரம் கமிஷன் கொடுத்துள்ளனர்.

தேதியும், நேரமும் நெருங்கி வந்ததால் ராதாகிருஷ்ணனுக்கும், அந்த பெண்ணுக்கும் உடுமலை திருமூர்த்திமலை அமணலிங்கேசுவரர் கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றது. பின்னர் அவர்கள் தாராபுரத்திற்கு வந்தனர். அங்கு முதலிரவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

முதலிரவின்போது புதுப்பெண், ராதாகிருஷ்ணனிடம் "தனக்கு மாதவிடாய் என்றும், மற்றொரு நாள் முதலிரவை வைத்து கொள்வோம்" என்றும் கூறி நைசாக முதலிரவை தவிர்த்துவிட்டார். மறுநாள் தனது தாய்க்கு உடல்நிலை சரியில்லை, பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரை பார்க்க செல்ல வேண்டும் என்று தெரிவிக்கவே ராதாகிருஷ்ணன் தனது மனைவியை பொள்ளாச்சிக்கு அழைத்துச்சென்றுள்ளார்.

பொள்ளாச்சிக்கு சென்றதும் அந்த கேரள பெண் திடீரென மாயமாகிவிட்டார். நீண்ட நேரமாகியும் அவர் திரும்பி வராததால் சோகத்துடன் தாராபுரத்திற்கு வந்த ராதாகிருஷ்ணன் நடந்த விவரத்தை தனது பெற்றோரிடம் தெரிவித்தார்.

இது தொடர்பாக போலீசில் புகார் அளிக்கப்பட்டது. விசாரணையில், நகைபணத்திற்காக ராதாகிருஷ்ணனை ஏமாற்றி கேரள பெண் திருமணம் செய்து இருப்பது தெரிய வந்தது. மேலும் அந்தப் பெண்ணின் கணவர் தான் திருமண புரோக்கர் போல் செயல்பட்டுள்ளார் என்பதும் தெரிய வந்தது. இந்த சம்பவம் தாராபுரம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதேபோல்திருமணம் ஆகாத பல வாலிபர்களிடம் பணம் மற்றும் நகையை பறிப்பதற்காக அந்த புரோக்கர் தனது மனைவியையே வேறு வாலிபர்களுக்கு திருமணம் செய்து வைத்து நூதன திருமண மோசடியில் ஈடுபட்டு வந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. அந்தப் பெண்ணுக்கு குழந்தையும் உள்ளது. இருப்பினும் அவர்கள் பணத்திற்காக இந்த நூதன மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் போலீசில் சிக்காமல் இருக்க தங்களது பெயரை மாற்றி கொடுத்து ஏமாற்றி வந்துள்ளனர். இதையடுத்து தாராபுரம் போலீசார் திருமண புரோக்கரையும், அவரது மனைவியையும் தேடி வருகின்றனர்.

## மொபைல் ரீசார்ஜ் கட்டணம் விரைவில் உயர வாய்ப்பு

சென்னை, மே .30

நாட்டில் முன்னணி டெலிகாம் நிறுவனங்கள், 4ஜிமற்றும்5ஜிசேவையை வழங்கி வருகின்றன. ஏர்டெல் மற்றும் ஜியோ நிறுவனங்கள், பல்வேறு பகுதிகளில் 5ஜி சேவை வழங்கி வருகின்றன. வோடபோன் நிறுவனம் விரைவில், 5ஜி சேவை வழங்கும் எனதெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2021ம் ஆண்டு இறுதியில் டெலிகாம் நிறுவனங்கள், 20 சதவீதம் வரை ரீசார்ஜ் கட்டணத்தை உயர்த்தின. மக்களவை தேர்தல் முடிவுகள் வெளியான பின், ஏர்டெல், ஜியோ, வோடபோன் நிறுவனங்கள் ரீசார்ஜ் கட்டணத்தை, 10 முதல் 17 சதவீதம் வரை உயர்த்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 5ஜி உள்கட்டமைப்புக்காக, டெலிகாம் நிறுவனங்கள் அதிக முதலீடுகள் செய்துள்ளன. அதை ஈடுகட்டும் வகையில், விரைவில் ரீசார்ஜ் கட்டணம் உயர்த்தப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

# வாடகை வாகன டிரைவர்கள் வேலை நிறுத்தம்: திருச்சியில் ஆவின் பால் விநியோகம் பாதிப்பு




திருச்சி, மே. 30

திருச்சி மாவட்டத்தில் வாடகை பாக்கியால் ஆவின் பால் எடுத்து செல்லும் வாடகை வாகன டிரைவர்கள் மற்றும் வாகன உரிமையாளர்கள் திடீர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று நள்ளிரவு முதல் திடீரென வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். 4 மாதங்களாக வாடகை கொடுக்கப்படவில்லை என குற்றஞ்சாட்டி ஆவின் பால் கொண்டுசெல்லும் வாகனங்களின் டிரைவர்கள், வாகன உரிமையாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக திருச்சி மாவட்டத்தில் இன்று ஆவின் பால் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. திருச்சி மட்டுமின்றி பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களிலும் ஆவின் பால் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

# கிறிஸ்தவ ஆலய சொத்து: பதிவுத்துறை சட்டத்தின் கீழ் கொண்டுவரும் நேரம் வந்துவிட்டது: மதுரை ஐகோர்ட்டு



மதுரை, மே. 30

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரைச் சேர்ந்த ஷாலின், மதுரைஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், "கடந்த ஆண்டு விஜயா என்பவரிடம் இருந்து சொத்து கிரையம் செய்தேன். அந்தசொத்தை பதிவு செய்ய திருப்பத்தூர் சார்பதிவாளர் மறுத்துவிட்டார். இது தொடர்பாக சார்பதிவாளர் 29.3.2023 அன்று பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து, நான் வாங்கிய சொத்தை உடனடியாக பத்திரப்பதிவு செய்யும்படி உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறியிருந்தார். இந்த மனு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது திருப்பத்தூர் சார்பதிவாளர் தாக்கல் செய்த பதில் மனுவில், 2017ம் ஆண்டில் 2 வழக்குகளை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு, தமிழ்இவாஞ்சலிக்கல் லூத்தரன் சர்ச் (டி.இ.எல்.சி.) சொத்துகளை ஐகோர்ட்டு அனுமதி இல்லாமல் பத்திரப்பதிவு செய்யக்கூடாது என உத்தரவிட்டது. இது தொடர்பாக பதிவுத்துறை ஐ.ஜி. சுற்றறிக்கை அனுப்பி உள்ளார். அதன் அடிப்படையில் மனுதாராரின் சொத்து பதிவு மறு நிராகரிக்கப்பட்டது" என கூறப்பட்டு இருந்தது.

விசாரணை முடிவில் நீதிபதி பிறப்பித்த உத்தரவில், "தமிழில் 'சிவன் சொத்து குலநாசம்' என்பார்கள். அதாவது 'கோவில் சொத்துக்களை அபகரித்தால் குடும்பம் அழிந்துவிடும்' என்பது அதன் அர்த்தம். இந்து, முஸ்லிம் மதங்களின் சட்டப்படியான சொத்துக்களை பதிவுத்துறை சட்டம் பாதுகாக்கிறது. அந்த பதிவுத்துறை சட்டத்தில் கிறிஸ்தவ ஆலய சொத்துக்கள் சேர்க்கப்படவில்லை.

கோவில் சொத்துகள் இந்து சமய அறநிலையத் துறை சட்டப்படியும், வக்பு வாரிய சொத்துகள் வக்புவாரிய சட்டப்படியும் பாதுகாக்கப்படுகின்றன. கிறிஸ்தவ ஆலய சொத்துகளை பொறுத்தவரை இதுபோன்ற சட்டம் இல்லாதது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

இந்தியா மதசார்பற்ற நாடு என்பதால் அனைத்து மதங்களையும் சமமாக அணுக வேண்டும். இதனால் கிறிஸ்தவ ஆலய சொத்துகளை பதிவுத் துறை சட்டம் 22ஏ பிரிவின் கீழ் கொண்டு வருவதற்கான நேரம் வந்துவிட்டது.

டி.இ.எல்.சி. சொத்து வழக்கில் பிரதான வழக்கு வாபஸ் பெறப்பட்டு உள்ளது. இதனால் அதுதொடர்பான வழக்கின் இடைக்கால உத்தரவுக்கு உயிர் இல்லை. எனவே தற்போது டி.இ.எல்.சி. சொத்துகளை பொறுத்தவரை பத்திரப்பதிவு செய்ய எந்த தடையும் இல்லை. மனுதாரர் சொத்தை பதிவு செய்யமறுத்திருப்பத்தூர் சார்பதிவாளரின் உத்தரவு ரத்து செய்யப்படுகிறது" என்று நீதிபதி தனது உத்தரவில் கூறியுள்ளார்.

# 11 வயது சிறுமிக்கு 6 மாதமாக பாலியல் தொல்லை: சென்னையில் நேர்ந்த கொடூரம்

சென்னை, மே. 30

சென்னை வில்லிவாக்கம் பகுதியைச் சேர்ந்தவர் 11 வயது சிறுமி. இவரது பெற்றோர்கள் குடிக்கு அடிமை ஆனதால் சிறுமி பராமரிப்பு இல்லாமல் வளர்ந்துள்ளார். இந்நிலையில் சிறுமியை டெய்லர் குமார் மற்றும் 16 வயதுடைய 2 சிறுவர்கள் என 3 பேர் கடந்த 6 மாதமாக பாலியல் பலாத்காரம் செய்து வந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த இரு தினங்களுக்கு முன்பு சிறுமி திருவேற்காடு பகுதியில் வசிக்கும் தனது சித்தி வீட்டுக்கு சென்று, வயிறு வலிப்பதாகவும், பெரியப்பா மகன் தன்னிடம் தவறாக நடந்து கொண்டதாகவும் கூறி அழுதுள்ளாள். இதை கேட்டு அதிர்ச்சியடைந்த உறவினர்கள் சிறுமியை உடனே ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றனர். டாக்டர்கள் பரிசோதித்து பார்த்தபோது சிறுமி 6 மாதமாக பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இதையடுத்துசிறுமியின் பாட்டி வில்லிவாக்கம் காவல்நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி சிறுமியை அழைத்து போலீசார் விசாரித்தபோது பல அதிர்ச்சி தகவல்கள் வெளியாகின. சிறுமியிடம் முதலில் 16 வயதான பெரியப்பா மகன் தின்பண்டங்களை வாங்கி கொடுத்து பாலியல் பலாத்காரம் செய்தார். இதை பார்த்த எதிர்வீட்டில் வசிக்கும் மற்றொரு 16 வயது சிறுவன்சிறுமியைமிரட்டி பாலியல் பலாத்காரம் செய்துள்ளான்.

இதுபோல் அதே பகுதியில் டெய்லர்கடைநடத்தி வரும் குமார் என்பவரும் சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். கடந்த 6 மாதங்களாக வேதனைகளை அனுபவித்து வந்த சிறுமி, தனது பெற்றோரிடம் தெரிவிக்க முயன்றபோது அவர்கள் மதுபோதையில் கண்டு கொள்ளவில்லை என சிறுமி வேதனையுடன் கூறியுள்ளாள் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதையடுத்துசிறுமியின் பெரியப்பா மகன், எதிர் வீட்டு சிறுவன், டெய்லர் குமார் ஆகிய 3 பேர் மீது போலீசார் போக்சோ சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்து கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் சென்னையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சீறும் பாம்பை கையில் பிடித்த பெண் கைது: வனத்துறை அதிரடி



கோவை, மே. 30

கோவைபுலியகுளத்தில் ஒரு கோவில் அருகே பாம்பு ஒன்று காணப்பட்டது. இதனால் அச்சம் அடைந்த பொதுமக்கள், அதே பகுதியை சேர்ந்த அப்துல் ரகுமான், சின்ன வேடம்பட்டியை சேர்ந்த உமாமகேஸ்வரி ஆகியோருக்கு தகவல் கொடுத்தனர். அவர்கள் அங்கு விரைந்து வந்து அந்த பாம்பை பிடித்து கோவை வனச்சரக வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்.

முன்னதாக அவர்கள், அலேக்காக பாம்பை பிடித்து கையில் வைத்திருப்பது போன்ற வீடியோ எடுத்து சமூக வலைத்தளத்தில் பதிவிட்டனர். அதில் பாம்பு போன்ற அரிய வகை உயிரினங்களை கண்டால் அடித்துக் கொல்லக் கூடாது. எங்களை போன்ற பாம்பு பிடி வீரர்களுக்கு தகவல் கொடுத்து வன உயிரினங்களை காப்பாற்ற வேண்டும் என்று விழிப்புணர்வு வீடியோ வெளியிட்டனர். அது வைரலாக பரவியது.

இதைத்தொடர்ந்து உமாமகேஸ்வரி, அப்துல் ரகுமான் ஆகியோர் மீதும் உரிய அனுமதி இன்றி பாதுகாக்கப்பட்ட இனத்தை சேர்ந்த பாம்பை பிடித்ததாக வனத்துறையினர் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர். இதுகுறித்து வனத்துறையினர் கூறும்போது, பிடிக்கப்பட்ட பாம்பு இந்தியன் ராட் ஸ்னேக் இனத்தை சேர்ந்தது. 5 அடி இருக்கும். இது பாதுகாக்கப்பட்ட அட்டவணை 1ல் உள்ளது. இந்த வகை பாம்பை வனத்துறையின் அனுமதியின்றி பிடிக்க கூடாது. மேலும் பாம்பை பிடித்து வீடியோ எடுத்தது தொடர்பாக கைது செய்து நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றனர்.

# மாணவர்கள் பழைய பஸ் பாஸ் மூலம் பயணிக்கலாம் என அறிவிப்பு



சென்னை, மே. 30

கோடை விடுமுறைக்கு பிறகு அடுத்த மாதம் (ஜூன்) 6ந் தேதி பள்ளிகள் திறக்கப்பட உள்ளன. எனவே அன்றைய தினமே மாணவர்கள் அரசு பஸ்களில் இலவசமாக பயணிக்கலாமா? அல்லது புதிய பாஸ் தரும் வரை டிக்கெட் எடுக்க வேண்டுமா? என்ற கேள்வி எழுந்தது.

இதுகுறித்து போக்குவரத்து கழகத்தின் உயர் அதிகாரி ஒருவர் கூறும்போது,

"அரசு பஸ்களில் மாணவர்களிடம் பஸ் பாஸ் கேட்க மாட்டோம். பழைய பஸ் பாஸ் மூலம் பயணிக்கலாம்.

அவர்கள் சீருடை அணிந்து இருந்தாலே இலவசமாக பயணிக்கலாம். இந்த ஆண்டு மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்குவதற்காக கல்வித்துறையில் இருந்து மாணவர்களின் விவரங்கள் பெற்று ஆன்லைன் மூலம் புதிய பாஸ் விரைந்து வழங்கப்படும்" என்றார்.

# சிறப்பு பிரிவு மாணவர்களுக்கான கலந்தாய்வு தொடங்கியது

சென்னை, மே. 30

தமிழ்நாட்டில் உள்ள 164 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள சுமார் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட இளங்கலை படிப்புகளில் சேருவதற்கான ஆன்லைன் விண்ணப்பப்பதிவுகடந்த 6ந் தேதி தொடங்கி, 24ந் தேதியுடன் நிறைவு பெற்றது. சுமார் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட இடங்களுக்கு 2 லட்சத்து 11 ஆயிரத்து 10 விண்ணப்பங்கள் பெறப்பட்டு இருந்தன.

விண்ணப்பித்தவர்களுக்கான தரவரிசை பட்டியல் அந்தந்த கல்லூரிகளுக்கு நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்டன. தரவரிசை பட்டியலில் சிறப்பு பிரிவு மாணவ மாணவிகளுக்கான கலந்தாய்வு நேற்று தொடங்கியுள்ளது. சிறப்பு பிரிவில் வரும் மாற்றுத்திறனாளிகள், விளையாட்டு வீரர்கள், முன்னாள் ராணுவத்தினரின் பிள்ளைகள், தேசிய மாணவர் படை ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இவர்களுக்கு அந்தந்த கல்லூரிகளில் நாளை (வியாழக்கிழமை) வரை கலந்தாய்வு நடைபெற உள்ளது. கல்லூரிகள் விண்ணப்பித்த சிறப்பு பிரிவு மாணவ மாணவிகளை இந்த 3 நாட்களுக்குள் கலந்தாய்வுக்கு அழைத்து இடங்களை ஒதுக்க அறிவுறுத்தப்பட்டு இருக்கின்றன. அதன்படி, கல்லூரிகள் அவர்களை கலந்தாய்வுக்கு அழைத்து இடங்களை நிரப்பி வருகின்றன.

இதனைத்தொடர்ந்து பொதுப் பிரிவினருக்கான முதல் கட்ட கலந்தாய்வு அடுத்த மாதம் (ஜூன்) 10ந் தேதி முதல் 15ந் தேதி வரையிலும், 2ம் கட்ட கலந்தாய்வு 24ந் தேதி முதல் 29ந் தேதி வரையிலும் அந்தந்த கல்லூரிகளில் நடத்தப்பட இருக்கிறது. இதில் இடங்களை தேர்வு செய்யும் மாணவ மாணவிகளுக்கான முதலாம் ஆண்டு வகுப்பு ஜூலை மாதம் 3ந் தேதி தொடங்கும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இனிய குரலில் பேசிய இளம்பெண்... நம்பி சென்ற தொழில் அதிபர்.. அடுத்து நடந்த பரபரப்பு



சென்னை, மே. 30

சென்னை ராயப்பேட்டை மீர்பக்ஷி அலி தெருவை சேர்ந்தவர் ஜாவித் சைபுதீன் (வயது 32). இவருக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர். இவர், பர்மா பஜாரில் செல்போன் விற்பனை கடை வைத்துள்ளார். பட்டினப்பாக்கம் போலீஸ் நிலையத்தில் இவர் கடந்த 24ந் தேதி அன்று பரபரப்பு புகார் மனு அளித்திருந்தார். 0அதில் அவர், 'நான் கடந்த 17ந் தேதி அன்று பட்டினப்பாக்கம் கற்பகம் அவென்யூ 2வது தெருவில் நடைபெற்ற விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்க காரில் சென்றிருந்தேன். அப்போது மற்றொரு காரில் வந்த 4 பேர் கும்பல் என்னை கடத்தி சென்றனர். மதுரவாயல் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் அடைத்து வைத்தனர். ரூ.50 லட்சம் கொடுத்தால் உயிரோடு விட்டு விடுகிறோம் என்று மிரட்டினார்கள்.

நான் எனது சகோதரர் மூலம் பணத்தை ஏற்பாடு செய்து கொடுத்தேன். பின்னர் அந்த கும்பல் என்னை சேத்துப்பட்டு ரெயில்வே பாலம் அருகே இறக்கிவிட்டு சென்றனர்' என்று கூறியிருந்தார். இந்த புகார் குறித்து இன்ஸ்பெக்டர் விஜயகுமாரி வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினார். அவரது தலைமையில் தனிப்படையும் அமைக்கப்பட்டது. போலீஸ் விசாரணையில், ஜாவித் சைபுதீனின் செல்போன் எண்ணுக்கு இளம்பெண் ஒருவர் அடிக்கடி பேசி வந்துள்ளார். அந்த பெண், 'என்னை உங்களுக்குதெரியாது.ஆனால் உங்களை எனக்கு நன்றாக தெரியும். உங்களை நேரில் பார்க்க ஆசையாக இருக்கிறது. பட்டினப்பாக்கம் கற்பகம் அவென்யூ 2வது தெருவில் 17ந் தேதி நடக்கும் விருந்து நிகழ்ச்சிக்கு நான் வருகிறேன். நீங்களும் வாருங்கள். அங்கு இன்ப அதிர்ச்சி காத்திருக்கிறது' என்று இனிக்கும் குரலில் பேசி அழைத்திருக்கிறார்.

முகமும் காட்டாமல், முகவரியும் சொல்லாமல் பேசிய அந்த பெண்ணின் பேச்சை நம்பி, என்னதான் நடக்கிறது பார்ப்போமே? என ஜாவித் சைபுதீன் குறிப்பிட்ட இடத்துக்கு சென்றுள்ளார். அப்போதுதான் அவர் கத்திமுனையில் கடத்தப்பட்டு உள்ளார். ஜாவித் சைபுதீனை கடத்தியவுடன் அவர் வைத்திருந்த ரூ.10 ஆயிரம் மற்றும் விலையுயர்ந்த 2 செல்போன்களை கடத்தல் கும்பல் பறித்துள்ளது. பின்னர், அந்த கும்பலின் மிரட்டலுக்கு பயந்து ஜாவித் சைபுதீன் தனது சகோதரர் மூலம் மயிலாப்பூர் நடுக்குப்பம் பகுதியில் வைத்து கடத்தல் கும்பல் கேட்ட ரூ.50 லட்சத்தை 2 தவணையாக கொடுத்துள்ளார் என்பது தெரிய வந்தது. இதில் ஜாவீத் சைபுதீனை இனிக்கும் குரலில் பேசிய இளம்பெண் வேலூர் மாவட்டம் குடியாத்தம் பகுதியைசேர்ந்த சோனியா (26) என்பது தெரியவந்தது. அவரை தனிப்படை போலீசார் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர்.

ஜாவித் சைபுதீன் வசதியானவர் என்பதை கடத்தல் கும்பலை சேர்ந்தவர்கள் மோப்பம் பிடித்து வைத்திருந்தனர். அவருடைய செல்போன் எண்ணை வாங்கி சோனியாவிடம் கொடுத்துள்ளனர். பின்னர் அந்த கும்பலின் திட்டத்தின்படியே ஜாவித் சைபுதீனிடம் சோனியா இனிக்க, இனிக்க பேசி தனது வலையில் விழ வைத்துள்ளார்என்பதுபோலீஸ் விசாரணையில் கண்டறியப்பட்டது. இதே போன்று இந்த கடத்தல் கும்பல் சோனியாவை பகடை காயாக வைத்து தொழிலதிபர்களை மிரட்டி பணம் பறித்துள்ளார்களா? என்பது குறித்தும் போலீசார்தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தண்டவாளத்தில் அறுந்து விழுந்த மின்கம்பி.. 7 ரெயில்கள் நடுவழியில் நிறுத்தம்

ஜோலார்பேட்டை, மே.30

பெங்களூரு ரெயில் நிலையத்திலிருந்து கன்னியாகுமரி செல்லும் கன்னியாகுமரி எக்ஸ்பிரஸ் ரெயில் நேற்று முன்தினம் இரவு 11.50 மணியளவில் திருப்பத்தூர்ரெயில்நிலையம் அருகே வந்தபோது ரெயில் என்ஜினுக்கு மின் சப்ளை வராததாதல் ரெயில் நடுவழியில் நின்றது. உடனடியாக என்ஜின் டிரைவர் கீழே இறங்கி தண்டவாள பாதையில் சென்று பார்த்தபோது உயர் அழுத்த மின்கம்பி அறுந்து தண்டவாளத்தில் விழுந்து கிடந்தது தெரிய வந்தது. இதனையெடுத்து திருப்பத்தூர் ரெயில் நிலைய அதிகாரிக்கு என்ஜின் டிரைவர்தகவல் தெரிவித்தார்.

உடனடியாக திருப்பத்தூர் ரெயில் நிலைய எலக்ட்ரிக்கல் என்ஜினீயர்கள் மற்றும் குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அறுந்து கிடந்த உயர் அழுத்த மின்கம்பியை சரி செய்யும் பணியில் ஈடுபட்டனர். சுமார் 1 மணி நேரம் சரி செய்யும் பணி நடைபெற்றது. அதன் பிறகு நள்ளிரவு 12.54 மணியளவில் ரெயில் அந்த இடத்திலிருந்து புறப்பட்டது.

இதனால் ஜோலார்பேட்டை, சேலம், ஈரோடு மார்க்கத்தில் செல்லும் ரெயில்களான சென்னை ஆலப்புழா எக்ஸ்பிரஸ், சென்னை மேட்டுப்பாளையம் செல்லும் நீலகிரி எக்ஸ்பிரஸ்,

சென்னை கோவை செல்லும் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ், கோரக்பூர் கொச்சுவேலி எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட 7 ரெயில்கள் ஆங்காங்கே உள்ள ரெயில் நிலையங்களில் நிறுத்தப்பட்டன. ஒரு மணி நேரத்துக்கும் மேல் தாமதம் ஏற்பட்டதால் ரெயில் பயணிகள் கடும் அவதிக்குள்ளாகினர்.

# திண்டுக்கல் அருகே ஓடும் ரெயிலில் இருந்து தவறி விழுந்து வாலிபர் பலி

திண்டுக்கல், மே. 30

திண்டுக்கல் மாவட்டம் குஜிலியம்பாறையை அடுத்த பாளையம் அருகே, ரெயில்வே தண்டவாள பகுதியில் நேற்று காலை 35 வயது வாலிபர் ஒருவர் பிணமாக கிடந்தார். இதுகுறித்து தகவலறிந்த திண்டுக்கல் ரெயில்வே போலீசார் விரைந்து சென்று இறந்தவரின் உடலை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அப்போது அவருடைய பேண்ட் பாக்கெட்டில் ஈரோட்டில் இருந்து நெல்லைசெல்வதற்கான முன்பதிவில்லாத டிக்கெட் மட்டும் இருந்தது. வேறு எந்த ஆவணங்களும் இல்லை. இதனால் அவர் யார்? எந்த ஊரை சேர்ந்தவர்? என்று தெரியவில்லை. அவர்நெல்லை அல்லது ஈரோட்டை சேர்ந்தவராக இருக்கலாம் என்ற கோணத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அந்த வழியாக சென்ற ஏதோ ஒரு ரெயிலில் இருந்து அவர் தவறி விழுந்து இறந்தது தெரிய வந்தது. இதையடுத்து இறந்தவரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு போலீசார் அனுப்பி வைத்தனர். மேலும் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# விரைவில் திருமணம்... தாய்மாமன் தற்கொலை: சோகத்தில் நர்சிங் மாணவி எடுத்த விபரீத முடிவு




காரைக்குடி, மே. 30

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கண்டனூர் ரோடு கீழத்தெருவை சேர்ந்தவர் செல்வி. இவர் அரசு ஆஸ்பத்திரியில் பணியாற்றுகிறார். மனநலம் பாதித்தோருக்கு கவுன்சிலிங் கொடுத்து வருகிறார். இவருடைய மகள் சுபஸ்ரீ (வயது 20). இவர் புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் அருகே வெள்ளாறு பாலம் அடுத்துள்ள நர்சிங் கல்லூரி விடுதியில்தங்கி 3ம் ஆண்டு படித்து வந்தார்.

செல்வியின் தம்பி முத்துக்குமார் (27). இவர் செல்வியின் வீட்டில் தங்கியிருந்து, திருச்சியில் உள்ள ஒரு நிதி நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். சுபஸ்ரீயும், தாய்மாமனான முத்துக்குமாரும் காதலித்து வந்துள்ளனர். இதையடுத்து இருவருக்கும் வீட்டில் பேசி திருமணம் நிச்சயம் செய்துள்ளனர். இதற்கிடையே சிலரிடம் பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக முத்துக்குமார் மன உளைச்சலில் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

நேற்று மதியம் காரைக்குடியில் உள்ள அக்காள் வீட்டில் முத்துக்குமார் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். வேலை முடிந்து வீடு திரும்பிய செல்வி, தனது தம்பி தூக்கில் பிணமாக தொங்கியதை பார்த்து அதிர்ச்சி அடைந்து அலறினார். இது குறித்து காரைக்குடி வடக்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இதற்கிடையே முத்துக்குமார் இறந்த தகவலை நர்சிங் கல்லூரி விடுதியில் தங்கி படிக்கும் சுபஸ்ரீயிடம் உறவினர்கள் தெரிவித்து அவரை அழைத்து வர சென்றுள்ளனர். அங்கு முத்துக்குமார் இறந்த தகவலை சுபஸ்ரீயிடம் அவரது சித்தி கூறியுள்ளார். இதில் மனமுடைந்த சுபஸ்ரீ விடுதி அறைக்குள் சென்று நீண்ட நேரம் ஆகியும் திரும்பி வரவில்லை.

இதனால் சந்தேகம் அடைந்த விடுதி வார்டன் அறையின் கதவை தட்டியுள்ளார். வெகுநேரமாகியும் அவர் கதவை திறக்கவில்லை. உடனே அங்கிருந்தவர்கள் கதவை உடைத்து கொண்டு உள்ளே சென்றனர். அப்போது அங்குள்ள மின்விசிறியில் சுபஸ்ரீ தூக்குப்போட்டு தொங்கிய நிலையில் உயிருக்கு போராடிகொண்டிருந்தார். அவரை மீட்டு சிகிச்சைக்காக ஆம்புலன்ஸ் மூலம் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் சுபஸ்ரீ ஏற்கனவே இறந்து விட்டதாக கூறினர். இதுகுறித்து நமணசமுத்திரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருமணம் நிச்சயிக்கப்பட்ட நிலையில் காதலனும், அதை தொடர்ந்து காதலியும் வெவ்வேறு இடங்களில் அடுத்தடுத்து தற்கொலை செய்துகொண்ட சம்பவங்கள் சோகத்தை ஏற்படுத்தின.

# இயக்குநர் பாண்டிராஜ் உடன் இணையும் ஜெயம் ரவி?





தமிழ் திரையுலகில் வித்தியாசமான கதையம்சம் கொண்ட படங்களில் நடித்து புகழ்பெற்றவர் ஜெயம் ரவி. இவர் இயக்குநர் கிருத்திகா உதயநிதி இயக்கும் "காதலிக்க நேரமில்லை" படத்தில் நடித்துள்ளார். ஏ.ஆர். ரகுமான் இசையமைக்கும் இந்த படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் நிறைவடைந்தது.

இந்த நிலையில், ஜெயம் ரவி நடிக்கும் புதிய படம் தொடர்பான தகவல்கள் வெளியாகி வருகின்றன. அந்த வகையில், ஜெயம் ரவி அடுத்து நடிக்க இருக்கும் படத்தை இயக்குநர்பாண்டிராஜ்இயக்கஇருப்பதாககூறப்படுகிறது.

நடிகர் ஜெயம் ரவி நடிப்பில் இயக்குநர் பாண்டிராஜ் இயக்கும் புதிய படத்தை அடங்கமறு மற்றும் சைரன் படங்களை தயாரித்த ஹோம் மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்க இருப்பதாக கூறப்படுகிறது. இந்த படத்தின் படப்பிடிப்பு ஜூலை மாத வாக்கில் துவங்க இருப்பதாக தெரிகிறது.

இந்த படம் கிராம பின்னணியில் உருவாகும் குடும்ப பொழுதுபோக்கு கதையம்சம் கொண்டிருக்கும் என்று கூறப்படுகிறது. இயக்குநர் பாண்டிராஜ் கடைசியாக இயக்கிய எதற்கும் துணிந்தவன் படம் வசூல் ரீதியில் நல்ல வரவேற்பை பெற்றது.

# ராயன் படத்தின் அடுத்த அப்டேட் கொடுத்த தனுஷ்



தனுஷ் நடிப்பில் உருவாகும் 50 ஆவது படம் ராயன். தனுஷ் நடித்து, இயக்கியுள்ள ராயன் படத்தில் எஸ்.ஜே. சூர்யா, செல்வராகவன், பிரகாஷ் ராஜ், காளிதாஸ் ஜெயராம், சந்தீப் கிஷன், துஷாரா விஜயன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

ஏ.ஆர். ரகுமான் இசையமைத்துள்ள இந்த படம் ஜூன் 13 ஆம் தேதி வெளியாக இருக்கிறது. இதையொட்டி இந்த படத்தின் பாடல்களை படக்குழு வெளியிட்டது. இந்த படத்தின் இரு பாடல்கள் ஏற்கனவே வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றன.

இந்த நிலையில், ராயன் படத்திற்கான பின்னணி இசை சேர்க்கும் பணிகள் நிறைவுபெற்றதாக தனுஷ் தெரிவித்துள்ளார். இது குறித்த தகவலை அவர் தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில், "ராயன் படத்திற்கானபின்னணி இசைபணிகள்நிறைவுபெற்றன. புயல்வந்து கொண்டு இருக்கிறது," எனகுறிப்பிட்டுள்ளார்.

# கோவிலில் சாமி தரிசனம் செய்த அரண்மனை நடிகை



மத்திய பிரதேசத்தின் உஜ்ஜைன் நகரில் மகாகாலேஸ்வரர் கோவில் உள்ளது. இந்த கோவிலில் பிரபல நடிகர், நடிகைகள் அடிக்கடி வந்து சாமி தரிசனம் செய்வது வழக்கம். இந்நிலையில், இன்று நடிகைகள் ராசி கன்னாவும், வாணி கபூரும் மகாகாலேஸ்வரர் கோவிலில் சாமி தரிசனம் செய்துள்ளனர்.

இது குறித்தான வீடியோ வெளியாகி வைரலாகி வருகிறது. மேலும், நடிகை வாணி கபூர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் புகைப்படங்களை பகிர்ந்து, 'ஜெய் மகாகாலேஸ்வரர்' என்று பதிவிட்டுள்ளார்.

சாமி தரிசனம் செய்த பின்னர் நடிகை ராசி கன்னா கூறுகையில், ஜெய் ஸ்ரீ மகாகாலேஸ்வரர். மகிழ்ச்சியாக உணர்ந்தேன். உண்மையில், நாங்கள் இருவரும் ஒரே மாதிரியாக உணர்ந்தோம். மகாகாலேஸ்வரர் எங்களை மீண்டும் அழைப்பார் என்று நம்புகிறேன், இவ்வாறு கூறினார்.

# நீட் கொடுமையை எதிர்க்கும் `அஞ்சாமை' கவனம் ஈர்க்கும் டிரைலர்




டிரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரிக்கும் புதிய படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் சில நாட்களுக்கு முன் வெளியிடப்பட்டது. விதார்த் நடிப்பில் உருவாகி இருக்கும் இந்த படத்திற்கு "அஞ்சாமை" என தலைப்பிடப்பட்டு இருக்கிறது. எஸ்.பி. சுப்புராமன் இயக்கும் இந்த படத்தில் வாணி போஜன் கதாநாயகியாக நடித்துள்ளார்.

இப்படத்திற்கு ராகவ் பிரசாத் இசையமைத்துள்ளார். ஒளிப்பதிவு பணிகளை கார்த்திக் மேற்கொள்ள, படத்தொகுப்பு பணிகளை ராம் சுதர்சன் மேற்கொண்டுள்ளார். ஜி.சி. ஆனந்தன் கலை இயக்குநராக பணியாற்றி உள்ளார். இப்படத்தின் பாடல்களை அறிவுமதி, கார்த்திக் நேத்தா, எஸ்.பி. சுப்புராமன் மற்றும் அருண் பாரதி ஆகியோர் எழுதியுள்ளனர்.

இந்நிலையில் தற்பொழுது படத்தின் டிரைலர் வெளியாகியுள்ளது. படம் நீட் தேர்வினால் ஏற்படும் பிரச்சனைகள் பற்றியும், அதனால் ஏற்படும் தற்கொலைகள் பற்றியும், இதனால் குடும்பங்கள் எவ்வாறு பாதிக்கிறது, அரசு மாணவர்களின் நிலமை மற்றும் எப்படி கல்வி வியாபாரமாக ஆகியுள்ளது போன்ற சமூக பிரச்சனையை பேசக் கூடிய காட்சிகள் டிரைலரில் அமைந்துள்ளது.

படத்தின் டிரைலர் சமூக வலைத்தளங்களில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. திரைப்படம் வரும் ஜூன் மாதம் வெளியாகவுள்ளது.

# `மழை பிடிக்காத மனிதன்' படத்தின் டீசர் வெளியீடு

ரோமியோ திரைப்பட வெற்றிக்கு பிறகு விஜய் ஆண்டனி மற்றும் சரத்குமார் இணைந்து நடித்துள்ள புதிய படம் "மழை பிடிக்காத மனிதன்". விஜய் மில்டன் இயக்கத்தில் உருவாகி இருக்கும் இந்த படத்தில் சத்யராஜ், டாலி தனஞ்சயா, முரளி ஷர்மா, மேகா ஆகாஷ், தலைவாசல் விஜய், சரண்யா பொன்வண்ணன் மற்றும் பிருத்வி அம்பெர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.




கமல் போஹ்ரா, லலிதா, பிரதீப் மற்றும் பன்கஜ் போஹ்லரா இணைந்து தயாரித்துள்ள இந்த படத்தின் டீசர் மே 29 ஆம் தேதி ரிலீசாகும் என்று படக்குழு அறிவித்து புதிய போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் விஜய் ஆண்டனி ஒரு சிறிய நாய் குட்டி மற்றும் பக்கத்தில் குடையை வைத்துக் கொண்டு அமர்ந்து இருக்கிறார். இப்படம் எவ்விதமான கதைக்களத்துடன் அமைந்து இருக்கும் என ரசிகர்களிடம் எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

இந்த படம் விரைவில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது. இப்படம் தொடர்பான இதர அப்டேட்கள் வரும் நாட்களில் வெளியாகும் என்று எதிர்பார்க்கலாம்.




# மகாராஜா படத்தின் புது அப்டேட்

விஜய் சேதுபதியின் 50 வது படமாக 'மகாராஜா' படம் உருவாகி வருகிறது. குரங்கு பொம்மை படத்தை இயக்கிய நிதிலன் சாமிநாதன் இப்படத்தை இயக்குகிறார். இப்படத்தை சுதன் சுந்தரம் மற்றும் ஜெகதீஷ் பழனிச்சாமி இணைந்து தயாரிக்கின்றனர்.

இப்படத்தில் அனுராக் காஷ்யப், மம்தா மோகன்தாஸ், நட்டி, முனிஷ்காந்த், சிங்கம் புலி, பாரதிராஜா, வினோத் சாகர், பி.எல்.தேனப்பன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இந்த படத்துக்கு அஜனீஷ் லோக்நாத் இசையமைக்கிறார்.

இந்த படத்தின் 'பர்ஸ்ட் லுக்' போஸ்டர், சில மாதங்களுக்கு முன் வெளியானது. அதில் இதுவரை கண்டிராத அவதாரத்தில் விஜய் சேதுபதியின் தோற்றம் அமைந்திருந்தது. ஒரு சலூனுக்குள் ஆழ்ந்த சிந்தனையில் காயங்களுடன் விஜய் சேதுபதி அமர்ந்துள்ள அந்த போஸ்டர் ரசிகர்களின் ஆர்வத்தைத் தூண்டியுள்ளது.

மேலும், இந்த படத்தில் அரசியல் மற்றும் சமூக பிரச்சினைகள் குறித்து காட்சிப்படுத்தப்பட்டு உள்ளதாக தெரிகிறது. தற்பொழுது படக்குழு ஒரு போஸ்டரை வெளியிட்டுள்ளனர். அதில் BIG ANNOUNCEMENT நாளை காலை 11 மணிக்கு வெளியிடப் போவதாக அறிவித்துள்ளனர். இது படத்தின் ரிலீஸ் தேதியை பற்றி இருக்கும் என ரசிகர்களால் எதிர்பார்க்கப்படுகிறது.

# பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்: ஜோகோவிச், மெத்வதேவ் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டி பாரீஸ் நகரில் நடந்துவருகிறது. தகுதிச்சுற்று முடிந்து முதல் சுற்றுப் போட்டிகள் நடந்து வருகின்றன.

இந்நிலையில், ஆண்கள் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று போட்டியில் செர்பிய வீரர் ஜோகோவிச், பிரான்ஸ் வீரர் ஹெர்பர்ட்டுடன்

மோதினார். இதில் 64, 76 (73), 64 என்ற செட் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் ரஷியாவின் டேனில் மெத்வதேவ், ஜெர்மனியின் டொமினிக் கோபருடன் மோதினார். இதில் மெத்வதேவ் முதல் இரு செட்டை 63, 64 என எளிதில் கைப்பற்றினார். 3வது செட்டை டொமினிக் 75 என வென்றார். இதனால் சுதாரித்துக்கொண்ட மெத்வதேவ் 4வது செட்டை 63 என கைப்பற்றி அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.



# ஐ.பி.எல்.இன் ஹீரோ அவங்க தான்.. ரூ. 25 லட்சம் அறிவித்த ஜெய்ஷா

ஐ.பி.எல். 2024 கிரிக்கெட் தொடரின் உண்மையான ஹீரோக்கள் மைதான பராமரிப்பாளர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் தான் என பி.சி.சி.ஐ. செயலாளர் ஜெய் ஷா தெரிவித்துள்ளார்.

மேலும், ஐ.பி.எல். போட்டிகளை நடத்திய மைதானத்தின் பணியாளர்கள், பொறுப்பாளர்களுக்கு அதிகபட்சம் ரூ. 25 லட்சம் வரை வழங்கப்படும் என்று அவர் அறிவித்துள்ளார்.

"சமீபத்திய டி20 சீசனின் உண்மையான கதாநாயகர்கள் அயராது உழைத்த மைதான பராமரிப்பாளர்கள் தான். அவர்கள் தான் கடினமான வானிலையின் போதும், தலைசிறந்த பிட்ச்களை உருவாக்குவதில் சிறப்பாக ஈடுபட்டனர்."



"அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பத்து ஐ.பி.எல். மைதானங்களின் பராமரிப்பாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கு ரூ. 25 லட்சமும், கூடுதலாக மூன்று மைதானங்களின் ஊழியர்களுக்கு ரூ. 10 லட்சமும் வழங்கப்படும்," என்று ஜெய் ஷா தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

ஐ.பி.எல். 2024 பத்து மைதானங்கள் பட்டியலில் மும்பை, டெல்லி, சென்னை, கொல்கத்தா, சண்டிகர், ஐதராபாத், பெங்களூரு, லக்னோ, ஆமதாபாத் மற்றும் ஜெய்ப்பூர் உள்ளிட்டவை இடம் பெற்றுள்ளன.

# சவுதி லீக்கில் ஒரு சீசனில் அதிக கோல்: கிறிஸ்டியானோ ரொனால்டோ சாதனை



கால்பந்து ஜாம்பவான் கிறிஸ்டியானோ ரொனால்டோ சவுதியில் உள்ள அல்நாசர் அணிக்காக விளையாடி வருகிறார். அல்நாசர் அணி தனது கடைசி லீக் ஆட்டத்தில் நேற்று அல்இத்திஹாட் அணியை எதிர்கொண்டது. இதில் அல்நாஸர் அணி 42 என அல் இத்திஹாட் அணியை வீழ்த்தியது. இந்த போட்டியில் 39 வயதான கிறிஸ்டியானோ ரொனால்டோ 2 கோல்கள் அடித்தார். இதன்மூலம் சவுதி புரோ லீக் கால்பந்தில் ஒரு சீசனில் அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார். இதற்கு முன்னதாக அப்டெர்ரஜாக் ஹம்தல்லா 2019ல் 34 கோல்கள் அடித்ததுதான் சாதனையாக இருந்தது. அதை தற்போது கிறிஸ்டியானோ ரொனால்டோ முறியடித்துள்ளார். இது தொடர்பாக இன்ஸ்டாகிராமில் கிறிஸ்டியானோ ரொனால்டோ "சாதனைகளை நான் பின்தொடரவில்லை. அதுதான் என்னை பின்தொடர்கின்றன" எனக் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்டியானோ ரொனால்டோ ஐந்து முறை பலோன் டி'ஆர் விருதை வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இளம் வீரர்கள் சிறப்பாக விளையாட வேண்டும் என ரோகித் பாய் விரும்புவார் ரிங்கு சிங்

அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இண்டிஸ் நாடுகளில் அடுத்த மாதம் டி20 உலகக்கோப்பை தொடங்க உள்ளது. இந்த தொடருக்காக கிரிக்கெட் ரசிகர்கள் பெரிய எதிர்பார்ப்புடன் காத்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் 15 பேர் கொண்ட டி20 உலகக்கோப்பைக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டது. இதில் யாரும் எதிர்பார்க்காத வகையில் ரிங்கு சிங் இடம் பெறவில்லை. கடந்த ஆண்டு ஐபிஎல் தொடரில் கொல்கத்தா அணிக்காக அவர் பினிஷிங் ரோலில் எல்லோரும் ஆச்சரியப்படும் வகையில் விளையாடி இந்திய அணியில் வாய்ப்பை பெற்றார். இதைத் தொடர்ந்து இந்திய டி20 அணியில் கிடைத்த 15 வாய்ப்புகளில் மிகச் சிறப்பான பேட்டிங்கை பினிஷிங் ரோலில் வெளிப்படுத்தினார்.

ஆனால் அமெரிக்கா மற்றும் வெஸ்ட் இன்டிஸ் சூழ்நிலைகளில் விளையாட நான்கு சுழல் பந்துவீச்சாளர்கள் தேவை எனக் கருதிய இந்திய தேர்வுக்குழு ரிங்கு சிங்கை சேர்க்காமல் விலக்கி வைத்தது.

இதுகுறித்து ரிங்கு சிங் கூறியதாவது:

நல்ல செயல் திறனோடு இருந்தும் கூட நீங்கள் தேர்வு செய்யப்படவில்லை என்றால் அது யாருக்கும் வருத்தத்தை உண்டாக்கக் கூடியதாகத்தான் இருக்கும். ஆனால் இந்த மாதிரி அணி காம்பினேஷன் காரணமாக என்னை அவர்கள் தேர்வு செய்யவில்லை. ஆனாலும் பரவாயில்லை நம் கையில் இல்லாத விஷயங்கள் குறித்து நாம் எப்பொழுதும் கவலைப்பட கூடாது. ஆரம்பத்தில் இது குறித்து எனக்கு கொஞ்சம் வருத்தம் இருந்தது உண்மைதான். ஆனாலும் எது நடந்தாலும் பரவாயில்லை அது நன்மைக்கேதான் நடக்கும்.

ரோகித் பாய் என்னிடம் சிறப்பாக எதுவும் சொல்லவில்லை. அடுத்த இரண்டு வருடங்களில் இன்னொரு உலகக் கோப்பை இருக்கிறது, எனவே அதை நோக்கி கடுமையாக உழைத்து தயாராகும்படி மட்டும் கூறினார்.

ரோகித் பாய் கேப்டன்சி எவ்வளவு சிறந்தது என உலகம் பார்த்திருக்கிறது. அவருடன் என்னைப்பற்றி தனிப்பட்ட முறையில் பேசினால் நான் ஒரே ஒரு தொடரில் மட்டுமே விளையாடி இருக்கிறேன். அவருடன் நான் அதிகம் பேசியது கூட கிடையாது. இளம் வீரர்கள் நன்றாக விளையாட வேண்டும் என்று விரும்புவார். அவர் எப்பொழுதும் இளம் வீரர்களிடம் நன்றாக விளையாடுங்கள் என்றுதான் கூறுவார்.

இவ்வாறு ரிங்கு சிங் கூறினார்.



அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான்

**விளக்கம்:**

தனக்கு அறமும் ஆக்கமும் விரும்பாதவன் என்று கருதத் தக்கவனே, பிறனுடைய ஆக்கத்தைக்கண்டுமகிழாமல் அதற்காகப் பொறாமைப்படுவான்.

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.